உதகை முதுமலை புலிகள் காப்பக வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநரது செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் – திரு. து. வெங்கடேஷ், இ.வ.ப.,

செ. மு. எண். 3817/2020-ப2.

நாள். 4 -01-2022.

பொருள்- பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு. எஸ். சௌந்தரராஜன், வனவரின் மகன் திரு. சௌ. ரகுபதி, தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் - தொடர்பாக.

பார்வை-
1) துணை இயக்குநர், முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி கோட்டம் - கடித எண். 4436/2017-ப1, நாள். 10-07-2020, 23-10-2020,11-01-2021 மற்றும் 30-06-2021
2) இவ்வலுவலக கடித எண். 3817/2020-ப2, நாள். 28-08-2020, 09-11-2020 மற்றும் 25-01-2021.
3) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை, கடித எண். ண2/31022/2020, நாள். 16-02-2021,
4) அரசு கடித எண். 3696/வனம்.3/2021-1, நாள். 21-04-2021.
5) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை, கடித எண். ண2/31022/2020, நாள். 29-06-2021.
6) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை, கடித எண். ண2/31022/2020, நாள். 08-07-2021.
7) அரசு கடித எண். 3696/வனம்.3/2021-2, நாள். 18-09-2021.

* * * * * *

பார்வை 1ல் கண்ட கடிதத்தின்படி, நீலகிரி தெற்கு கோட்டத்தில் வனவராக பணியாற்றி பணியிடை மரணமடைந்த திரு. எஸ். சௌந்தரராஜன் என்பவரின் மகன் திரு. சௌ. ரகுபதி என்பவர் கருணை அடிப்படையில் 02-08-2017-ல் தற்காலிக தட்டச்சராக பணியில் சேர்ந்துள்ளார். இவரது பணியை வரன்முறை செய்வது தொடர்பாக பிரேரணை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது.

பார்வை 2ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின்படி, மேற்படி நபரின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பான பிரேரணை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பார்வை 7ல் கண்ட அரசு கடிதத்தின்படி, காலஞ்சென்ற திரு. எஸ். சௌந்தரராஜன், என்பவரின் மகன் திரு. சௌ. ரகுபதி என்பவர் அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள். 23-01-2020- ன் படி, அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், அவருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிக தட்டச்சர் பணியை அவர் பணியில் சேர்ந்த நாளான 02-08-2017 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு எந்தவித விதித்தளர்வுகளும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்குகளும் (Exemption of Government Orders) தேவைப்படாததால்,



Scanned by CamScanner

அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 26-02-2021-ன்படி, தனியரின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவ்வரசாணையின் பத்தி 5.2-ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்ய உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு அதனை தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு பணி வரன்முறை செய்த பின்னர், வெளியிடப்பட்ட ஆணையின் நகலை அரசுக்கு தவறாது அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், காலஞ்சென்ற திரு. எஸ். சௌந்தரராஜன், என்பவரின் மகன் திரு. சௌ. ரகுபதி என்பவர் அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள். 23-01-2020-ன்படி, அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், அவருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிக தட்டச்சர் பணியை அவர் பணியில் சேர்ந்த நாளான 02-08-2017 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு எந்தவித விதித்தளர்வுகளும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்குகளும் (Exemption of Government Orders) தேவைப்படாததால் அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள். 26-02-2021-ன்படி, தனியரின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, திரு. சௌ. ரகுபதி, த/பெ. காலஞ்சென்ற **திரு. எஸ். சௌந்தரராஜன் என்பவருக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக தட்டச்சர் பணியை, அவர் தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளான 02-08-2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.**

வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
முதுமலை புலிகள் காப்பகம்,
உதகமண்டலம்.

பெறுநர்
திரு. சௌ. ரகுபதி,
த/பெ. (லேட்), எஸ். சௌந்தரராஜன்,
துணை இயக்குநர், முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி கோட்டம் மூலமாக.

நகல் - துணை இயக்குநர், முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி கோட்டம்.
(மேற்படி தட்டச்சரின் பணி வரன்முறை பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான விவரத்தினையும், மேலும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தனியரின் அசல் சான்றாவணங்கள், கோப்பு எண். 4436/2017-ப1 – 240 பக்கங்கள் மற்றும் பணிப்பதிவேடு மீள அனுப்பப்படுகிறது அவற்றை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையினையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்)

நகல் - செயல்முறை ஆணை இருப்பு கோப்பு



Scanned by CamScanner